https://puthusudar.lk/ | puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

| 09th JUNE 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 83



04

## ரணில் 70 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறுவார்



# ரணில் பொது வேட்பாளர்

ஏதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளராக இல்லாமல் பொது வேட்பாளராக களமிறங்கப் போவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளுங்கட்சி பின்வரிசை எம்பிக்களுடனான சந்திப்பு 6ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் பத்ரமுள்ள ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்றது. அப்போதே ஜனாதிபதி அந்த எம்பிகளிடம் இவ்வாறு கூறினார்.

சிறுபான்மை இன கட்சிகள்

02

### தன்னை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துமாறு

## மஹிந்த -பசிலிடம் கெஞ்சிய எதிர்க்கட்சி தலைவர்

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தன்னை நிறுத்துமாறு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர் ஒருவர் மஹிந்த ராஜபக்ச மற்றும் பசில் ராஜபக்ச ஆகியோரைச் சந்தித்து கேட்டுள்ளார் என்று மொட்டு தரப்பு தெரிவிக்கிறது.

முதலில் மஹிந்தவை சந்தித்த இந்த தலைவர் இந்தக் கோரிக்கையை விடுத்தபோது தன்னால் தனிப்பட்ட முறையில் எதுவும் செய்ய முடியாது. கட்சியின் தீர்மானத்தின்படியே செயற்பட முடியும் என்று மஹிந்த கூறி இருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து பசிலை சந்தித்துள்ளார். பசில் அவருக்கு

02

## ஒக்டோபர் முதல் வாகன இறக்குமதி



வாகன இறக்குமதிக்கான அனுமதி ஒக்டோபர் மாதல் முதல் நான்கு கட்டங்களாக வழங்கப்படவுள்ளது என்று அரசு தெரிவித்துள்ளது.

முதல் கட்டமாக தொழில்சார் மற்றும் பாரிய வாகனங்களின் இறக்குமதிக்கான அனுமதி வழங்கப்படும்

இரண்டாம் கட்டமாக மோட்டார் சைக்கிள்கள் மற்றும்

02

## இந்த வருடம் பட்ஜட் இல்லை

இந்த வருடம் தேர்தல் இடம்பெறவிருப்பதால் அடுத்த வருடத்துக்கான பட்ஜெட்டை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதில்லை என்று அரசு முடிவெடுத்துள்ளது என்று நிதி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

02



புதுசுடர்
www.puthusudar.lk
2024 JUNE 09 - SUNDAY

# ரணிலுடன் இணைவாரா சஜித்?

ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்கவின் அலைதான் இப்போது அடிக்கிறது.ஜனாதிபதி தேர்தலில் அவர் வெல்வதற்கு வாய்ப்புள்ளது என்று கூறுகின்றன ஆய்வுகள்.உளவுத் துறை அறிக்கையும் அதையே சொல்கிறது.

இதனால் அனுரவை வீழ்த்த வேண்டிய தேவை ஜனாதிபதி தரப்புக்கு ஏற்பட்டுள்ளது. ரணிலையும் சஜித்தையும் இணைத்தால் அனுரவை இலகுவாக வீழ்த்தலாம் என்று நினைத்துக்கொண்டு ஜனாதிபதி தரப்பினர் சிலர் இப்போது இருவரையும் இணைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதை விடவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதுதான் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முக்கியமாக உள்ளது.இப்போதிருந்தே அதற்கான வேலைத்திட்டங்களை தொடங்கிவிட்டார் அவர்.

அரசியல் தீர்வை வழங்குகிறேன் என்ற போர்வையில் தமிழர்களின் வாக்குகளை சுருட்டுதல்.கூட்டணிகளை அமைத்தல்,மொட்டு கட்சியை உடைத்தல்,சஜித் தரப்பை பிரித்தல் என தேர்தலை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகளைத்தான் காண முடிகிறது.

அந்த வகையில்,இந்த வாரம் பேசத் தொடங்கியுள்ள விடயம் என்னவென்றால் சஜித்--ரணில் இணைவுபற்றித்தான்.

2019 ஜனாதிபதி தேர்தலில் அப்போதைய மொட்டு கட்சியின் வேட்பாளர் கோத்தாபய ராஜபக்சவை எதிர்த்துப் போட்டியிடுவதென்றால் அது ரணிலால் முடியாது.சஜித்தாலேயே முடியும் என்று மக்கள் கருதியதால் பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சஜித் வேட்பாளராக நிறுத்தப்பட்டார்.

கோத்தா 69 லட்சம் வாக்குகளை பெற்று வெற்றிபெற்றபோதிலும்,சஜீத்தால் 55 லட்சம் வாக்குகளையேனும் பெற முடிந்தமை அன்றைய காலகட்டத்தில் பெரிய விடயம் என்றே சொல்ல வேண்டும்.

ஆனால்,இன்றைய காலகட்டத்தில் அந்த எண்ணிக்கை அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

இத்தருணத்தில் சஜித் ரணிலுடன் இணைந்து அந்த வெற்றியை அநியாயமாக இழப்பாரா?

ஜேவிபி தலைவர் அனுரகுமாரவின் வெற்றியைத் தடுப்பதற்காக சஜித்தையும் ரணிலையும் இணைப்பதற்கு ரணில் தரப்பு முற்பட்டாலும் அந்த இணைவால் அனுரவை விடவும் அதிகம் பாதிக்கப்படப்போவது சஜித் பிரேமதாஸாதான்.ரணிலின் எதிரி அனுர அல்ல சஜித்.

சஜித் இணைந்தால் சஜித்துக்கு என்ன நடக்கும் என்று எல்லோருக்கும் தெரியும்.சஜித்தை அருகில் எடுத்து அப்படியே அழித்துவிடுவார் ரணில்.

தன்னை ஜனாதிபதியாக்கிய மொட்டு கட்சிக்கு அவர் செய்வதைப் பாருங்கள்.அந்தக் கட்சியை இரண்டு,மூன்று துண்டுகளாக உடைத்துவிட்டார். அதில் பெரிய துண்டை தன்னோடு இணைத்துக்கொள்வதற்குத்

திட்டமிட்டுதான் மொட்டு கட்சியின் நிமால் லான்ஸாவை வைத்து கூட்டணி ஒன்றை உருவாக்கி வருகிறார் ரணில்.

மொட்டில் இருந்து எப்படியும் 40 பேரை இழுத்தெடுப்பேன் என்று ரணிலுக்கு வாக்குறுதியளித்துள்ளார் லான்ஸா.இதில் லான்ஸாவும் பிரசன்ன ரணதுங்கவும் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இப்படி தன்னை ஜனாதிபதியாக்கிய கட்சிக்கே துரோகம் செய்யும் ரணில் ,தன்னை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தோற்கடித்த சஜித்தை மாத்திரம் விட்டுவைப்பாரா?

சஜித்தின் வளர்ச்சி ரணிலுக்கு என்றுமே ஆபத்துதான்.இதனால் சஜித்தை அருகில் எடுத்து அழிப்பதுதான் ரணிலின் திட்டம்.

இந்தத் திட்டத்துக்கு சஜித் என்றுமே துணைபோகமாட்டார். தனது கழுத்தை அறுக்கும் கத்தியை அவரே தீட்டிக் கொடுப்பாரா?

## இந்த...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்த வருடம் இடம்பெறும் ஜனாதிபதி தேர்தலில் தெரிவு செய்யப்படும் புதிய ஜனாதிபதி அடுத்த வருடம் ஜனவரியில் வரவு – செலவு திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு இடம் கொடுக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஜனாதிபதி தேர்தல் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் ஒத்திப்போடப்படாமல் இடம்பெறும் என்பது உறுதியாகிறது.

## ரணில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

உள்ளிட்ட அணைத்து கட்சிகளையும் கூட்டமைப்பாக இணைத்துக்கொண்டு ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளராக களமிறங்குவேன் என்று அங்கு அவர் மேலும் கூறினார்.

## ஒக்டோபர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஓட்டோக்களுக்கான அனுமதி வழங்கப்படும்.அதனைத் தொடர்ந்து மூன்றாம் கட்டமாக சிறிய ரக வாகனங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

ஆடம்பர வாகன இறக்குமதிக்கான அனுமதி இறுதியாகவே வழங்குவது என்று அரசு தீர்மானித்துள்ளது நிதி இராஜங்க அமைச்சர் ரஞ்ஜித் சியம்பலா பிடிய தெரிவித்துள்ளார்.

## தன்னை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)


எந்தவொரு பதிலையும் வழங்கவில்லை என்று தெரிய வருகிறது.

இந்தத் தலைவர் மஹிந்தவின் ஆட்சியில் அமைச்சராக இருந்தவர் என்றும் பின்னர் மஹிந்தவோடு முரண்பட்டுக்கொண்டு எதிர்க்கட்சி பக்கம் சென்றவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.









1982இல் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி 1988 வரை தேர்தலை ஒத்திப்போட்டார் ரணிலின் மாமா ஜே.ஆர். அதேபோல்தான் ரணிலும் செய்வதற்கு முற்படுகிறார்.

# தோல்வியைத் தடுக்க ஜனாதிபதியின் வியூகம்

இது தேர்தல் வருடமாக இருப்பதால்–ஜனாதிபதி தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ முதலில் நடக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதால் அரசியல் களம் இப்போதே சூடாகிவிட்டது. அனைத்து அரசியல் கட்சிகளும் பிஸியாகிவிட்டன.

கட்சி தாவல்–கூட்டணி அமைத்தல்–ரகசிய சந்திப்பு என்று பரபரப்பாகிவிட்டனர் அரசியல்வாதிகள்.

இந்தத் தேர்தலை அதிக ஆர்வத்துடன் எதிர்பார்த்திருப்பது எதிர்கட்சிகள்தான். அவர்களுக்குத்தான் வாசி அதிகம்.இப்போதே தேர்தல் பிரச்சாரங்களுக்கு இணையான பொதுக் கூட்டங்கள் நாடு பூராகவும் சூடு கிளப்பத் தொடங்கிவிட்டன.

அரச தரப்பு மண் கவ்வும் நிலைதான்.இருந்தாலும்,ஆட்சியை வீட்டுக் கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை.இதனால் எதையாவது செய்து ஆட்சியைத் தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறது ஜனாதிபதி தரப்பு.

இதனால் இரண்டு வருடங்களுக்கு நாடாளுமன்ற மற்றும் ஜனாதிபதி தேர்தல்களை ஒத்திப்போட வேண்டும் என்றொரு நிலைப்பாட்டை ஐக்கிய தேசிய கட்சி எடுத்துள்ளது.இதை அக்கட்சியின் பொது செயலாளர் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அரசியல் தளம் சூடாகத் தொடங்கியுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.மொட்டு கட்சி கூட இதை விரும்பவில்லை. அவர்களும் தேர்தல்கள் உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

அரசின் தேர்தல் தோல்வியைத் தடுப்பதற்காக ஜனதிபதிக்கு முதலில் முன்வைக்கப்பட்ட யோசனை நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும் என்பதுதான்.

அந்த யோசனையை முன்வைத்தவர் பசில் ராஜபக்ச.பசில் அமெரிக்காவில் சும்மா ஓய்வில் இருக்கவில்லை. அவர் அங்கிருந்துகொண்டு இலங்கையின் அரசியல் தளத்தை மிகவும் உன்னிப்பாக அவதானித்தார்.

கிராமங்களில் உள்ள மொட்டு கட்சி நிர்வாகிகளின் ஊடாக களநிலவரத்தை அறிந்துகொண்டார்.மொட்டு கட்சிக்கு எந்தளவு செல்வாக்கு இருக்கிறது என்பதையும் அறிந்துகொண்டார்.

அந்தவகையில்,வெறும் 20 வீதம் அளவிலான செல்வாக்குதான் மொட்டுக்கு இருக்கிறது.இதை வைத்துக்கொண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெல்ல முடியாது.

அதைவிட,நாடாளுமன்றத் தேர்தலை நடத்தினால் மேலே குறிப்பிட்டதுபோல் தோல்வியடைந்தாலும் எம்பிக்களை வாங்கி நாடாளுமன்ற ஆட்சியைப் பிடிக்கலாம்.

நாடாளுமன்ற ஆட்சி கையில் இருப்பதால் ஜனாதிபதி தேர்தலுக்குச் சென்றால் இலகுவாக வென்றுவிடலாம் என்று பசில் கருதுகிறார்.

இதற்கான வேலைத் திட்டத்தைத் தொடக்கி வைப்பதற்காகவே பசில் அமெரிக்காவில் இருந்து இலங்கை வந்தார். அவர் நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துவதற்கு ஆதரவாகப் பேசி வருவதைக் காணலாம்.

அந்தத் தேர்தலும் ஜனாதிபதிக்குத் தோல்வியையே கொடுக்கும் எனக் கருதும் ஜனாதிபதி எந்தத் தேர்தலையும் நடத்தாது இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடுவது நல்லது என்று நினைக்கிறார்.

இந்த நிலைப்பாட்டுடன் ஜனாதிபதியைத் தொடார்புபடுத்தாமல் ஐக்கிய தேசிய கட்சியின் தீர்மானமாக வெளிவந்துள்ளது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைவராக ஜனாதிபதி இருக்கும்போது அவருக்குத் தெரியாமல் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்பதை எவருமே நமபமாட்டார்கள்.இதற்கு யாருமே ஆதரவு இல்லை.மொட்டு கட்சிகூட இதை எதிர்க்கிறது.

எந்தத் தேர்தலை நடத்தினாலும் தமக்குத் தோல்விதான் என்று ஜனாதிபதி தரப்பு கருவதால்தான் தேர்தல்களை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போடுவதற்கு இவர்கள் முயற்சி செய்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே,தேர்தலை ஒத்திப்போட முடியாது. உரிய நேரத்தில் நடத்தியே ஆக வேண்டும்.

முதலில் வருவது நாடாளுமன்றத் தேர்தலோ, ஜனாதிபதி தேர்தலோ எந்தத் தேர்தலாக இருந்தாலும் இந்த அரசை விரட்டுவது என்பதில் மக்கள் உறுதியாகவே உள்ளார்கள்.

மீண்டும் ஒரு தடவை மக்கள் ஏமாறுவதற்குத் தயாரில்லை.வீழ்ந்த நாட்டைத் தூக்கி நிமிர்த்தாது அதன்மேல் ஏறி நின்றுதான் மக்களிடம் வாக்குக் கேட்டுச் சொல்லப் போகிறார்கள்.

இவர்களால் ஏற்படுத்தப்பட்ட மக்களின் பிரச்சினைகளை இவர்கள் இன்னும் தீர்க்கவில்லை.ஆனால்,பிரச்சினை தீர்ந்துவிட்டதாக இவர்கள் கூறுகிறார்கள்.

இந்தப் பொய்யெல்லாம் இனியும் எடுபடாது.மக்கள் இவர்களை விரட்டுவது என்ற தீர்மானத்தை கோத்தா விரட்டப்பட்ட சந்தர்ப்பத்திலேயே எடுத்துவிட்டார்கள்.

அந்த விரட்டலில் இருந்து–தோல்வியில் இருந்து தப்புவதற்காக தனது மாமா ஜே.ஆரின் வழியில் தேர்தலை ஒத்திப்போடுவதற்காக ரணில் முற்படுகிறார்.

1982இல் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி 1988 வரை தேர்தலை ஒத்திப்போட்டார் ரணிலின் மாமா ஜே.ஆர். அதேபோல்தான் ரணிலும் செய்வதற்கு முற்படுகிறார்.

***



# ரணில் 70 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெறுவார்



**கேள்வி:** ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் இரண்டையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போட வேண்டும் என்று நீங்கள் கூறியமைக்கு காரணம் நீங்கள் தோல்வியடைவீர்கள் என்பதாலா?

**கேள்வி:** ரணில் விக்ரமசிங்க வெல்வது உறுதியென்றால் ஏன் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போட வேண்டும் ?

**கேள்வி:** ஜனநாயகத்தை மதித்து அரசமைப்பின்படி,இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டே ஆக வேண்டும். அப்படி இருக்கும்போது அரசமைப்பை மீறும் வகையில் நீங்கள் செயற்பட முற்படுவது சரியா?

**கேள்வி:** நீங்கள் தேர்தலுக்கு தயாரா?

**கேள்வி:** ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது உறுதியா?

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா.அவரது முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி: ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற தேர்தல்கள் இரண்டையும் இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போட வேண்டும் என்று நீங்கள் கூறியமைக்கு காரணம் நீங்கள் தோல்வியடைவீர்கள் என்பதாலா?**

பதில் : அதைப்பற்றி நாம் கனவிலும் நினைக்கவில்லை. ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாவது உறுதி. அவர் 70 லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்று வெற்றிபெறுவது உறுதி.

**கேள்வி : அவர் வெல்வது உறுதியென்றால் ஏன் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு ஒத்திப்போட வேண்டும் ?**

பதில்: இதற்கு பல காரணங்கள் உண்டு. முதலாவது நாம் வங்குரோத்து அடைந்த நாடு.2022இல் நாம் பொருளாதார ரீதியில் மிக மோசமான நிலையை அடைந்தோம்.

இந்த நிலையில் இருந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசா மற்றும் ஜேவிபியின் தலைவர் அனுரகுமார திஸ நாயக்க ஆகியோர் அதில் இருந்து தவறியதால் ரணில் விக்ரமசிங்க முன்வந்து பாரமேற்றார்.இப்போது நிலைமை சீராகி வருகிறது.

டொலரின் பெறுமதி குறைந்துள்ளது.சுற்றுலாத்துறை முன்னேறி வருகிறது. பொருட்களுக்கான தட்டுப்பாடு இல்லை.மின்வெட்டு இல்லை. எரிபொருளுக்கு வரிசை இல்லை. உள்நாட்டு வருமானம் அதிகரித்து வருகிறது.சர்வதேசத்தின் நம்பிக்கையை வெற்றிகொள்ள முடிந்துள்ளது. நட்டமடைந்த நிறுவனங்கள் வெற்றியை நோக்கி நகர்கின்றன.

இவ்வாறு பல சாதகமான நிலைமை ஏற்பட்டுள்ளது.இந்த நிலைமையை அப்படியே முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

இந்த வருடம் ஜுலை இறுதியில்தான் வங்குரோத்து நிலையில் இருந்து விடுபடுவதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இந்த நிலையில்,நாம் தேர்தலுக்குச் சென்றால் அரசை சேவை முழுவதும் தேர்தலுக்கு 3 மாதங்களுக்கு முன்பே ஓரிடத்தில் ஸ்தம்பித்துவிட்டும்.

முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள். சுற்றுலாவாசிகள் வரமாட்டார்கள். தேர்தல் காலத்தில் வன்முறைகள் இடம்பெறுவதே இதற்கு காரணம்.

ஜுன் மாதம் 16 ஆம் திகதி அரசு கலைக்கப்படும் என்று உதயங்க வீரதுங்க கூறியதால் பங்கு சந்தை வீழ்ந்தது.அரசு கலைக்கப்படும் என்று சொன்னதற்கே இப்படியென்றால் தேர்தலை அறிவித்தால் நிலைமை எப்படி இருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்..

இந்த நிலையில் தேர்தலை நடத்தினால் எல்லாமே தலைகீழாக மாறிவிடும். நான் தினமும் மக்களை சந்தித்து வருகிறேன். அவர்கள் எல்லோரது நிலைப்பாடும் இப்படியே உள்ளது.

ரணில் விக்ரமசிங்கவுக்கு தேர்தல் தோல்விபற்றிய பயமில்லை.அவர் தோற்றும் இருக்கிறார்"வென்றும் இருக்கிறார்.அவருக்கு எல்லாம் ஒன்றுதான்.

அவருக்கு பயம் இருந்திருந்தால் ஜனாதிபதி பதவியை பாரமேற்றிருக்கமாட்டார்.

> தற்போதைய நிலையில், நாம் தேர்தலுக்குச் சென்றால் தேர்தலுக்கு 3 மாதங்களுக்கு முன்பே அரசை சேவை முழுவதும் ஓரிடத்தில் ஸ்தம்பித்து விட்டும்.

**கேள்வி : ஜனநாயகத்தை மதித்து அரசமைப்பின்படி,இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டே ஆக வேண்டும். அப்படி இருக்கும்போது அரசமைப்பை மீறும் வகையில் நீங்கள் செயற்பட முற்படுவது சரியா?**

பதில் : ஜனநாயகத்தை மதிக்க வேண்டும். தேர்தல் நடத்தப்பட்டால் மாத்திரம் ஜனநாயகம் பாதுகாக்கப்படுமா என்று யோசிக்க வேண்டும்.தாய்லாந்து,மியன்மார் ஆகிய நாடுகளில் என்ன நடந்தது என்று பார்த்தோம்.

தேர்தலில் மியன்மார் ஜனாதிபதி வென்றும்கூட ,அவர் வருடக் கணக்கில் இராணுவத்தால் வீட்டில் சிறை வைக்கப்பட்டுள்ளார்.

**கேள்வி: தேர்தலை ஒத்திப்போடும் உங்களது யோசனையை எல்லா கட்சிகளும் எதிர்க்கிறார்களே?**

பதில் : நான் எனது யோசனையை முன்வைத்துள்ளேன்.இதை ஏற்பதும் எதிர்ப்பதும் அவர்களது விருப்பம்.

**கேள்வி : நீங்கள் தேர்தலுக்கு தயாரா?**

பதில் : ஆம்..நாம் தயார். தேர்தல் ஒத்திப்போட வேண்டும் என்பது எனது யோசனை. அதற்கான காரணத்தையும் நான் கூறிவிட்டேன்.அதேவேளை, தேர்தல் வந்தால் அதற்கும் நாம் தயார்.

வெற்றிபெறக்கூடிய வேட்பாளர் எம்மிடம் இருக்கிறார். அதனால் தேர்தலை பார்த்து நாம் பயப்பட வேண்டிய தேவை இல்லை.

**கேள்வி : ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது உறுதியா?**

பதில் : ஆம்..அவர் அவரது விருப்பத்தைத் தெரிவித்துவிட்டார். ரணில்தான் வேட்பாளர் என்று ஐக்கிய தேசிய கட்சியும் தீர்மானம் எடுத்துவிட்டது.

# சமூகமயமாக்கல் முகவராக காணப்படும் பாடசாலையில் ஆசிரியர்கள்



கல்விச் செயற்பாட்டில் இருமுனைகள் காணப்படுகின்றன ஒருமுனையில் கற்போனாகிய மாணவரும் மறுமுனையில் கற்பிப்பவரான ஆசிரியரும் இருக்கின்றார்கள். கல்வியின் முனைகளாக இருக்கின்ற மாணவர்கள் கற்பவர்களாக, வழிநடத்தப்பட வேண்டியவர்களாக கருதப்படுகின்ற வேளை, ஆசிரியர்கள் என்போர் அரும்பணியொன்றின் கருத்தாக்களாக சமூகத்தில் கணிக்கப்படுகின்றார்கள்.

'கல்வி ஒன்றே இந்த உலகை மாற்றக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம்' என்ற கருத்து நெல்சன் மண்டேலாவின் வாக்கு ஆகும். ஒரு மரத்துக்கு எப்படி அதன் வேர் முக்கியமோ அதுபோலவே தான் மனித சமூகத்திற்கு கல்வி அவசியம் இன்றைய வாழ்க்கை முறையில் கல்வி என்பது ஒரு அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவையாக மாறிவிட்டது.

இவ்வாறு அத்தியாவசிய தேவையாக விளங்கும் கல்வி செயற்பாட்டில் கற்பித்தலும் ஆசிரியரும் முக்கிய பங்கு வைக்கின்றனர். அந்த வகையில் ஆசிரியர்கள் மாணவர்களை அறிவு, திறன், ஒழுக்கம், வாழ்க்கை என்பவற்றில் உயர்வடைய செய்வதற்காகவும் கற்பிப்பதற்கான திறன்கள், தேர்ச்சிகள், கற்பிக்கும் தரம் என்பவற்றினை மேம்படுத்திக் கொள்கின்ற செயல்முறை, பயிற்சி, அனுபவம், திறன்கள், மனப்பாங்கு, தொழிலுக்கு உரித்தான நடை, உடை,பாவனை, மொழி பிரயோகம், ஆளுமை, தொடர்பாடல் மற்றும் பிறசெயல்பாடுகள் என்பன ஆசிரியர் வாண்மை விருத்தியினுள் அடங்கும்.

ஆசிரியர்களின் சேவைக்காலப் பயிற்சி செயற்பாடுகளை வழங்கும் நிறுவனங்களாக கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம், தேசிய கல்வியல் கல்லூ ரிகள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், ஆசிரியர் நிலையங்கள் போன்றவற்றை குறிப்பிடலாம்.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற கூற்றுக்கு இணங்க பாரம்பரிய சமுதாயத்தில் ஆசிரியர் தொழில் இறைத்தொண்டாக கருதப்படுகின்றது. அதன் பின்னணியில் சமுதாயத்தின் தல விருட்சமாக இருந்து பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் ஊடாக மாணவர்களின் எதிர்கால வாழ்வை சிறப்பிக்க வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் ஆசிரியர் ஆவார்கள். ஆசிரியர் தொழிலின் உன்னத நிலையினை பேணும் வகையில் ஆசிரியர்களின் கௌரவம், மேன்மை, உயர்வு, மாண்பு என்பவற்றை எடுத்தியம்புவதற்கு 1966 இல் பரிஸ் யுனெஸ்கோ மாநாட்டின் படி ஒக்டோபர் 06 ஆசிரியர் தினமாக கொண்டாடப்பட்டது.

கல்வி என்பது அறிவால் மனதை நிரப்புவதாகும் என்ற கூற்றிற்கு இனங்க ஒவ்வொரு மாணவர்களது ஆற்றல்களும் மாணவர்களின் பிறப்புரிமை, சூழல், அனுபவம் என்பவற்றுக்கு அமைய மாறுபட்டு காணப்படும். எனவே ஆசிரியர் மாணவர்களின் தனித்திறமைகளை இனம் கண்டு அவர்களுக்கு கல்வி புகட்ட வேண்டும். புத்தகப் பூச்சிக்களை மாத்திரம் உருவாக்காது அவர்களுடைய ஆற்றல் திறமைகளை இனம் கண்டு இணைப்பாடவிதான செயல்பாடுகளிலும் அவர்களை ஈடுபடுத்தல் வேண்டும்.

மேலும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் ஒரு நண்பராக,ஆலோசகர், துன்பத்தில் கைகொடுப்பவர், ஆய்வாளராக, அவதானிப்பாளராக, தாய், தந்தை ,வழிகாட்டி, நீதிபதி, மேற்பார்வையாளர் என பல்வேறு நடி பாங்குகளை ஏற்கக் கூடியவராகவும் மற்றும் அவருடைய உளவியல் தன்மையை அறிந்து கொள்ளக்கூடிய திறமை உடையவராகவும் காணப்படுதல் வேண்டும். இதனாலையே ஒரு ஆசிரியர் மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் ஒழுங்கில் உலகில் ஒரு மனிதனை பூரணப்படுத்துகின்ற ஆற்றல் குருவிடமே உள்ளது என்ற சிறப்பிற்குரியவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள்.

ஆசிரியர்கள் கற்பித்தலில் விருப்பமுடையவராக இருத்தல் வேண்டும். மணி ஒலித்ததும் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் சிறந்த வினைத்திறனினை உண்டு பண்ணுவதில்லை கற்பித்தலில் ஈடுபடுவதற்கு முன்னர் ஆசிரியரும் கற்கும் மாணவர்களும் கற்பதற்கு ஆயத்தமாக இருக்க வேண்டும். இதன் மூலமே சிறந்த கற்றல் கற்பித்தல் செயல்பாட்டை முன்னெடுக்கலாம். ஒரு வகுப்பறையில் ஆசிரியர் கற்பித்தல் செயல்பாட்டில் ஈடுபடுவதற்கு முன்பு குறித்த விடயத்தினை அது சார்ந்த புதிய தகவலுடன் நவீன அறிவியல் பாதையில் பலதரப்பட்ட தரவுகளையும் திரட்டி ஆசிரியர் தன்னை நன்கு தயார்படுத்திக் கொண்டு கற்பித்தலில் ஈடுபட வேண்டும்.

உழஎனை-19 காரணமாக அதிகமான மாணவர்களுக்கு இணையதளம் மூலமாகவே கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் இடம்பெற்றிருந்தன. ஆனால் இணையதளம் மூலமாக மாணவர்களுக்கு எவ்வாறு கல்வியை கற்பிப்பது என்பது தொடர்பான போதிய அறிவு பல ஆசிரியர்களுக்கு இருந்திருக்கவில்லை. இதனால் சில ஆசிரியர்கள் முடெனைநெ கல்வியை எதிர்த்து கருத்துக்களை வெளியிட்டு இருந்தார்கள் ஆனால் நாட்டின் சூழ்நிலை காரணமாக மாணவர்களுடைய கல்வி இடைநிறுத்தப்படாது தொடர்ந்து மேற்கொள்வதற்கு இணையவழி கல்வி முறை அமைந்திருந்தது எனவே மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கு இணங்க கால மாற்றத்திற்கு ஏற்ப கற்பித்தல் முறைமைகளையும் மாற்றிக் கொண்டே செல்ல வேண்டும். ஆனால் சில ஆசிரியர்கள் இணையவழி கற்பித்தல் தொடர்பான போதிய பரீட்சையம் இல்லாத காரணத்தினால் இணையவழிக் கல்வியை ஏற்றுக்கொள்ளாதவர்களாகவும் காணப்பட்டனர். எனவே மாற்றத்தை ஏற்றுக் கொள்ளும் ஆசிரியர்களே சிறந்த ஆசிரியர்கள் ஆவார்கள்.

ஒரு விடயத்தை எவ்வாறான விதத்தில் மாணவர்களுக்கு கற்பிப்பது என்பதற்கான அறிவையும், திட்டமிடலையும் ஒரு ஆசிரியர் கொண்டிருப்பதோடு கற்றல் எந்த அளவுக்கு இடம்பெற்றுள்ளது என்பதை அறிய மதிப்பீட்டு திட்டம் வகுத்துக் கொள்ள கூடியவராக இருத்தல் வேண்டும். வகுப்பறையில் கற்பிப்பதற்கான சூழலை ஆசிரியர் ஏற்படுத்தல் வேண்டும். அந்த வகையில் வகுப்பறையானது மிகவும் சந்தோக்ஷமாகவும் ,ஆரோக்கியமானதாகவும், மன அமைதி நிறைந்த இடமாகவும் விளங்க ஆசிரியர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறாக புனிதமான தொழிலாக காணப்படுகின்ற ஆசிரியர் தொழில் இன்று பணம் சம்பாதிக்கும் தொழிலாகவும், பலவசதிகளும், விடுமுறைகளும் நிறைந்ததொரு தொழிலாக கருதி ஆசிரியர் தொழிலை தெரிவு செய்கின்ற ஆசிரியர்கள் தங்களுடைய கடமைகளை எவ்வாறு சிறந்த முறையில் செய்வார்கள் என்பது கேள்விக்குறியாகவே அமைகின்றது. இவ்வாறான ஆசிரியர்களினால் மாணவர் சமூகம் அடைந்து கொள்ள வேண்டியவைகளை அடைய முடியாமல் போகின்றது என்பதே உண்மையாகும்.

ஒவ்வொரு பெற்றோரும் தாம் எத்தகைய தொழில் புரிந்தாலும் தனது பிள்ளை கற்று சமூகத்தில் உயர் பதவி வகிக்க வேண்டும் என்ற அவாவுடன் தான் வாழ்நாட்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய பெற்றோர்களின் நம்பிக்கை எத்தனை ஆசிரியர்களினால் காப்பாற்றப்படுகின்றது? தங்களுக்கு வழங்கப்படும் நேர அட்டவணைக்கு ஏற்ப எத்தனை ஆசிரியர்கள் குறித்த தவணைக்குள் தங்களால் நிறைவு செய்யப்பட வேண்டிய பாடங்களை பாடசாலை வேளையில் நிறைவு செய்கிறார்கள்? பாடசாலை நேர காலத்துக்குள் நிறைவு செய்யப்பட வேண்டிய பாட அலகுகள் தனியார் கல்வி நிறுவனங்களில் மேலதிக வகுப்புகளில் நிறைவு செய்யப்படுவதாக கூறப்படுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

வெள்ளையாடை அணிந்து கையில் பிரம்புடன் சுற்றி வந்து பல சமுதாய நற்பிரஜைகளை உருவாக்கிய அக்கால ஆசிரியர்கள் இன்றும் நல்லிதயங்களினால் நினைவு கூறப்படுகிறார்கள் நன்றி உணர்வுடன் பாராட்டப்படுகிறார்கள். அக்கால ஆசிரியர்கள் நினைவு கூறப்படுவது போன்று இக்கால ஆசிரியர்கள் நினைவு கூறப்படுகின்றார்களா? என்றால் அதற்கு சமூகம் தான் பதில் சொல்ல வேண்டும்.

இலங்கையில் 25 மாவட்டங்களில் சில மாவட்டங்கள் கல்வியில் பின் தங்கிய மாவட்டங்களாக காணப்படுகின்றது. அவ்மாவட்டங்களில் கல்வி கற்பிப்பதற்காக நியமிக்கப்படுகின்ற அதிபர்கள்,ஆசிரியர்கள் அவ்மாவட்டங்களில் கல்வி கற்பிப்பதற்கு முன் வருவது இல்லை. அவர்கள் தங்களுடைய ஊரிலேயே ஆசிரியர் நியமனம் பெற வேண்டும் என விரும்புகின்றனர். இடமாற்றத்தை அவர்கள் விரும்பாதவர்களாகவும் காணப்படுவது ஒரு முறையான செயலாக கருத முடியாது.


ஆசிரியர்களே அர்ப்பணிப்புடனும் தாராள மனதுடனும் நமது சமூகத்தில் இருக்கும் பாடசாலை மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனும் சேவை மனப்பாங்குடனும் வேலை செய்கின்றனர். ஆனால் சமூகத்தில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் சம்பளப் போராட்டம், அதிக வேலைப்பழுக்கள், நீண்ட நேரம் வேலை செய்தல் போன்ற அற்ப காரணங்களை காட்டி சாலையில் போராடும் நிலையும் வேலைநிறுத்த போராட்டம் என்பவற்றையும் செய்கின்றனர். ஆனால் மாணவர்களின் கலைத்திட்டத்தை மாற்றவும் பாடசாலைக்கு மேலதிக வசதிகளை செய்து கொடுக்க வேண்டும் எனவும் மாணவர்களை கல்வியில் ஆர்வம் கொள்ளச் செய்வதற்கு இத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்று அவர்கள் ஒருபோதும் சிந்திப்பதில்லை அவர்கள் கடமைகளுக்காக மாத்திரமே ஆசிரியர் தொழிலை செய்கின்றனர்.

"தாய் ஊட்டா பாலை பசு ஊட்டும் "என்பது போல ஒரு ஆசிரியர் நவீன தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ப பல்வேறு விடயங்களை அறிந்து தமது தொழிலின் புனித தன்மையை உணர்ந்து சேவை மனப்பான்மையுடனும் மாறிவரும் உலகுக்கு ஏற்ப பல புதிய விடயங்களை தன்னுள் உள்வாங்கி மாணவர்களின் தனித்துவத்தை மற்றும் அவர்களின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணர்வதுடன் அவர்களுக்கு ஏட்டுக்கல்வியை மட்டுமல்லாது அதிகளவான அனுபவக் கல்வியையும் வழங்கி, நாட்டுக்கு சிறந்த நற்பிரஜைகளை உருவாக்குவதே ஆசிரியர் வாண்மை விருத்தி செயற்பாடாக அமைகின்றது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.



**காராளசிங்கம் ஷயந்தினி,**
**நான்காம் வருட கல்வியியல்**
**சிறப்புக்கற்கை மாணவி,**
**கல்வி பிள்ளை நலத்துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்,**
**வந்தாறுமூலை.**

# DFCC வங்கியின் ஆண்டறிக்கை வெளியீடு




DFCC வங்கி, 2023 ஆம் ஆண்டுக்கான தனது ஆண்டறிக்கையை அண்மையில் வெளியிட்டுள்ளதுடன், பலத்த சவால்கள் மற்றும் ஆர்வமூட்டுகின்ற வாய்ப்புக்கள் மத்தியில் மகத்தான பெறுபேறுகளை அது காண்பித்துள்ளது.

சவால்மிக்க மற்றும் வலுவான பொருளாதார சூழலில் எதிர்நீச்சல் போட்டு, சாதனைகள் படைத்த ஒரு நிதியியல் ஆண்டை னுகுஊஊ வங்கி பதிவாக்கியுள்ளது.

2030 ஆம் ஆண்டளவில் காபன் சமநிலை கொண்ட வங்கியாக மாறுகின்ற அதன் முயற்சிகளுடன், நிலைபேண்தகமை சார்ந்த பல்வேறு முன்னெடுப்புக்களின் துணையுடன் இந்த சாதனைகள் அனைத்தும் அதன் ஆண்டறிக்கையில் பிரதிபலிக்கின்றன.

வெளிப்படை அறிக்கையிடல் தொடர்பில் வங்கி கொண்டுள்ள தீவிரமான தராதரங்களுக்கு அமைவாக, ஒருங்கிணைந்த அறிக்கையிடல் வடிவத்தை னுகுஊஊ வங்கியின் ஆண்டறிக்கை உள்வாங்கியுள்ளது.

நிலைபேணத்தகு அபிவிருத்தி மீது வங்கியின் ஓயாத அர்ப்பணிப்பை இது ஆழமாக நிரூபிப்பதுடன், அதன் முழுமையான சூழலியல் மற்றும் சமூகப் பொறுப்புணர்வு அணுகுமுறையை வலியுறுத்துகின்றது.



# Smart Tank பிரிண்டர்கள் அறிமுகம்

வீட்டுப் பயனாளர்கள், நுண் மற்றும் சிறு வணிகங்களின் அன்றாட அச்சிடும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட புதிய Smart Tank பிரிண்டர்களை HP அண்மையில் வெளியிட்டுள்ளது. இன்றைய ஹைபிரிட் உலகில், மலிவு விலையிலும், பயனர் நட்பு மிக்கதான அம்சங்களுடன் மாத்திரமன்றி ஸ்மார்ட் பிரிண்டிங் தீர்வுகளுடன் கூடிய அச்சிடும் தீர்வுகளுக்கான தேவையும் அதிகரித்து வருகின்றது.

அதிகரித்து வரும் தொழில்முனைவோர் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு உதவியாக, தங்கு தடையின்றி அமைத்துக் கொள்ளக் கூடிய செயன்முறைகள், ஸ்மார்ட் அம்சங்கள், மேம்படுத்தப்பட்ட இணைப்புகளை ஏற்படுத்தக் கூடிய தெரிவுகள் மூலம் உரிய தேவையை அறிந்து, HP Smart Tank பிரிண்டர்கள் மேம்பட்ட பயனர் அனுபவத்தை வழங்குகின்றன.

சுய செயற்பாட்டுக்கான Wi-Fi® திறன்கள், ஸ்மார்ட் செயலி மற்றும் ஸ்மார்ட்டான மேம்பட்ட அம்சங்களை உள்ளடக்கிய எளிதாக்கப்பட்ட மேம்பட்ட செயற்பாடு ஆகிய வசதிகள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இது முன்கூட்டியே நிரப்பப்பட்ட மை மூலம் 6,000 கறுப்பு வெள்ளை பக்கங்களை அல்லது 6,000 வண்ணப் பக்கங்களை பிரிண்ட செய்யும் ஆற்றல் கொண்ட, தடையின்றி அச்சிடுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்த பிரிண்டர்கள் புதிய சென்சர் அடிப்படையிலான Ink Tank தொழில்நுட்பம் மூலம் இயக்கப்படுவதால், இது மை தீர்ந்து போவதற்கு முன்பாகவே பயனர்களை எச்சரிக்கின்றன.

தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளில் பயனர்களுக்கு duplex பிரிண்டிங் மேலதிக வசதியும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் தாளின் இரு புறமும் தன்னிச்சையான முறையில் அச்சிட முடியும்.

# யூனியன் அஷ்யூரன்ஸ், oDoc உடன் இணைவு




முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கையில் முன்னணி தொலைத்தொடர்பாடல் மருத்துவ சேவைகள் வழங்கும் நிறுவனமான oDoc உடன் பங்காண்மையில் கைச்சாத்திட்டுள்ளது.

சௌகரியமான மற்றும் வினைத்திறனான சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதை கவனத்தில் கொண்டு, தனது காப்புறுதிதாரர்களுக்கு மூலோபாய பங்காண்மைகள் மற்றும் தொழில்நுட்ப ரீதியான புத்தாக்கத்தினூடாக சுகாதார பராமரிப்பு சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பின் பிரகாரம் யூனியன் அஷ்யூரன்ஸ் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பங்காண்மையினூடாக யூனியன் அஷ்யூரன்ஸ் மற்றும் oDoc வாடிக்கையாளர்கள் அனைவரும் பெருமளவு அனுகூலம் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

oDoc கட்டமைப்பினூடாக சகல வைத்திய ஆலோசனைகளுக்கும் யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதிதாரர்களுக்கு பிரத்தியேகமான விலைக்கழிவுகள் வழங்கப்படும். இதனை யூனியன் அஷ்யூரன்ஸ் ClickLife App இனூடாக இலகுவாக அணுகக்கூடியதாக இருக்கும்.

இந்த பிரத்தியேகமான சலுகையினூடாக, தரமான சுகாதாரப் பராமரிப்பை அணுகுவதற்கு ஒப்பற்ற வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், காப்புறுதிதாரர்களுக்கு சுகாதாரப் பராமரிப்பு நிபுணர்களுடன் சௌகரியமான முறையில் அணுகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைந்துள்ளது.




# சினோபெக்கின் முதலாவது எரிபொருள் நிரப்பு நிலையம் திறப்பு

ளுைழைநஉ நுநெசபல டுயமெய ீ(ஏவ) டுவன நிறுவனம், இலங்கையில் கால்பதித்து முதலாவது ஆண்டு நிறைவையொட்டி, மாபெரும் சாதனையாக நவகமுவ வுசயளெ டுயமெய குடைடபைெ ளுவயவழைெ இல் புனரமைப்புச் செய்யப்பட்ட தனது முதலாவது எரிபொருள் நிரப்பு நிலையத்தை வெகுவிமரிசையாக திறந்து வைத்துள்ளது.

150 எரிபொருள் நிலையங்களின் செயல்பாடுகளை 7 மாதங்களாக சீராக முன்னெடுத்து வந்துள்ள நிலையில், நாட்டின் எரிசக்தித் துறைக்கு புத்துயிரளிப்பதில் சினோபெக் நிறுவனத்தின் நீண்டகால அடிப்படையிலான அர்ப்பணிப்பை இப்புதிய முயற்சி சுட்டிக்காட்டுகின்றது.

வெளித்தோற்றம் மற்றும் வசதிகளின் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடைமுறைகளை கணிசமான அளவில் மேம்படுத்தும் பாதுகாப்பு ஏற்பாடுகள், மனிதவளங்கள் சார்ந்த பயிற்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதாக சினோபெக் நிறுவனத்தின் புனரமைப்பு கோட்பாடுகள் காணப்படுகின்றன.

எதிர்காலத்தைப் பொறுத்தவரையில், அடுத்த 3 ஆண்டு காலப்பகுதியில் எஞ்சியுள்ள 149 எரிபொருள் நிரப்பு நிலையங்களையும் புனரமைப்புச் செய்வதற்கு சினோபெக் திட்டமிட்டுள்ளதுடன், புதிதாக 50 எரிபொருள் நிரப்பு நிலையங்களை திறப்பதற்கான வாய்ப்புக்களையும் ஆராய்ந்து வருகின்றது.

# SLT-MOBITEL எல்லையளவு நிதிசார் வளர்ச்சிப் பதிவு



நிறைவடைந்த முதல் காலாண்டில், SLT குழுமம் மொத்த வருமானமாக ரூ. 26.93 பில்லியனை பதிவு செய்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1.4% வளர்ச்சியாகும்.

எவ்வாறாயினும், முன்னைய நிதியாண்டின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், வருமானத்தில் 3.7% அதிகரிப்பை அவதானிக்க முடிந்தது. இதில் நிறுவனசார் மற்றும் புரோட்பான்ட் பிரிவுகளின் வருமான அதிகரிப்பு முக்கிய பங்களிப்பை வழங்கியிருந்தன.

நிறுவனம் செலவுக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், தொழிற்படு செலவீனத்தில் 0.6% சரிவை ஏற்படுத்தியிருந்தது (தேய்மானம் மற்றும் பெறுமதி இறக்கம் தவிர்ந்த). வருடாந்த பராமரிப்பு செலவு (AMC), சர்வதேச கொடுப்பனவுகள் மற்றும் இணைய பின்புல கட்டணங்கள் போன்றன ரூபாய் மதிப்புயர்வு காரணமாக டொலர் சார்ந்த செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி இதில் முக்கிய பங்காற்றியிருந்தது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், தளம்பல்களுடனான வியாபார சூழல் காணப்பட்டதுடன், பெரும் பொருளாதார காரணிகளினால் நிறுவனத்தின் வருமானத்தில் தாக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், SLT-MOBITEL துரிதமாக செலவு செம்மையாக்கல் மூலோபாயத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்ததுடன், அதனூடாக நிறுவனத்துக்கு தொழிற்படு செலவை குழும மட்டத்தில் 2.7% வரை சேமித்துக் கொள்ள முடிந்தது.

SLT-MOBITEL இன் செலவு சேமிப்பு முயற்சிகளில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதில், குறிப்பாக வருடாந்த பராமரிப்பு செலவுகள், வாகன வாடகை கட்டணங்கள், சர்வதேச செலுத்துகைக் கட்டணங்கள் மற்றும் பழுதுபார்ப்பு, பராமரிப்பு செலவுகள் போன்றன அடங்கியிருந்தன.

இந்த ஏற்பாடுகளினூடாக, வருடாந்த அடிப்படையில் EBITDA அதிகரிப்பான 10.3% பெற்றுக் கொள்ள ஏதுவாக இருந்ததுடன், நிறுவனத்தின் தொழிற்பாட்டு வினைத்திறனை வெளிப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் ஏற்படுத்தியிருந்தது.




# Ezviz உடன் தொடர்ச்சியான கூட்டாண்மையை கொண்டாடும் IT Gallery

IT Gallery நிறுவனத்தினால் 2018 இல் ஆரம்பிக்கப்பட்ட அதன் வருடாந்த கூட்டாளர் மாநாடானது, அதன் நாட்காட்டியில் முக்கிய நிகழ்வாக தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இது தொழில்துறையில் தொடர்புகளை வலுப்படுத்துதல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிகழ்வாகும். நிறுவனத்தின் இலங்கைக்கான முகாமையாளர் திருமதி Rita Liu மற்றும் பிராந்திய சந்தைப்படுத்தல் முகாமையாளர் திருமதி Li Xin ஆகியோர் இந்த வருட நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் 2024 பதிப்பானது, ஸ்மார்ட் இல்ல பாதுகாப்பு (smart home security) தொடர்பான வர்த்தகநாமமான Ezviz உடனான IT Gallery நிறுவனத்தின் தொடர்ச்சியான கூட்டுறவை மேலும் வலியுறுத்துகிறது.

அதன் தற்போதைய முன்னணி விநியோகஸ்தரான IT Gallery நிறுவனம், முதன்முதலில் நுணஎணை வர்த்தக நாமத்தை 6 வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு அறிமுகப்படுத்தியிருந்தது.

இலங்கையில் உள்ள குடும்பங்களுக்கு WiFi கெமராக்கள் முதல் ஸ்மார்ட் EioT சாதனங்கள் வரை புத்தாக்கமான பாதுகாப்புத் தீர்வுகளை வழங்குவது தொடர்பில் நிறுவனம் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் ஒரு அங்கமாக இது அமைகின்றது.

2023 ஆம் ஆண்டு முதல் தங்களது சொந்த வணிகத்தையும் Ezviz வணிகத்தையும் முன்னெடுத்துச் சென்ற IT Gallery நிறுவனத்தின், முதல் மூன்று இடங்களில் உள்ள கூட்டாளர்களை கௌரவிப்பதே இந்த நிகழ்வின் முதன்மையான நோக்கமாகும்.




# மாதவிடாய் துவாய் வறுமையை எதிர்த்து போராடும் MASஇன் Femography

10,000 க்கும் மேற்பட்ட மீள்பயன்பாட்டு சுகாதாரத் துவாய்களை நன்கொடையாக வழங்குவதன் மூலம் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரத்திற்கான அதன் அர்ப்பணிப்பை MAS இன் Femography மேலும் அதிகரித்துள்ளது.

இந்த நன்கொடைகள் மாதவிடாய் சுகாதாரத் துவாய் வறுமையை ஒழிப்பதற்காகப் போராடி இந்நாட்டுப் பெண்களின் வாழ்வை வலுவடையச் செய்யும் நோக்கில் செய்யப்பட்டன.

பெண்களின் விசேட தேவைகளுக்கு தீர்வு காணும் முயற்சியாக சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமானது, பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கும் 2000க்கும் மேற்பட்ட பெண்களுக்கு உதவிகளை வழங்குவதாகும்.

Femography 'Run for Her' வேலைத் திட்டத்துடன் இணைந்து, இந்த மீள்பயன்பாட்டு சுகாதார துவாய் நன்கொடை மற்றும் சுகாதாரத் தேவைகளுக்கான நிதி மற்றும் விழிப்புணர்வைத் திரட்டியது.

பெண்மையின் படைப்புத்திறன் மற்றும் பராமரிப்பு ஆற்றலால் ஈர்க்கப்பட்ட ஆடைகள் மூலம் பெண்களுக்கு நல்ல ஆரோக்கியம், பெருமை மற்றும் நம்பிக்கையை ஏற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட Femography, பெண்களின் சுகாதாரத்திற்கான பாரம்பரிய வரம்புகளுக்கு எதிராக நிற்கும் FemTech ஆடைத் துறையில் ஒரு முன்னோடியாகவும் குறிப்பிடலாம்.

# TASTE THE CURRENT பிரசாரம் ஆரம்பம்




PepsiCo நிறுவனத்தின் வர்த்தக நாமமான Sting®, அதன் சமீபத்திய பிரசாரமான 'Taste The Current' மூலம் இலங்கையில் உள்ள வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்த தயாராகியுள்ளது.

இந்த பிரசாரமானது, ஆக்கபூர்வமாகவும் விளையாட்டுத் தனமாகவும் இளைஞர்களை உற்சாகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வர்த்தகநாமத்தின் எண்ணக்கருவை உள்ளடக்கிய ஒரு உயிரோட்டமான புதிய வீடியோ பிரசாரமாக அது அமைகின்றது.

இந்த வீடியோவானது, STING® ஐப் பருகுவதன் மூலம் நுகர்வோர் தமது தருணங்களை சக்தியுடன் கூடிய மின்மயமாகுமாறு ஆக்கபூர்வமாக கூறுகிறது. பழுதடைந்த கார் ஒன்றில் நெடுஞ்சாலை ஒன்றில் சிக்கித் தவிக்கும் பெண் ஒருவரை காண்பிக்கும் காட்சியுடன் இதன் கதை ஆரம்பமாகிறது.

அவ்வழியே வரும் ஒரு இளைஞன் குறித்த பெண்ணுக்கு உதவி செய்யும் நோக்கில், அவளிடம் காரை மீண்டுமொரு முறை ஸ்டார்ட் செய்யுமாறு கூறுகிறான். கார் ஸ்டார்ட் ஆக மறுக்கும் நிலையில், அவன் தனது வாகனத்தில் இருந்த Sting® போத்தல்கள் அடங்கிய குளிர்பானப் பெட்டியை எடுத்து அதிலிருந்து ஒரு போத்தலை எடுத்து அவளை ஆச்சரியப்படுத்துகிறான்.

STING® பானத்தின் ஒரு மிடறானது, கதாநாயகனை கலகலப்பான நடன அசைவுகளைச் செய்யத் தூண்டுவதன் மூலம், எவ்வாறான ஒரு அதிர்வை ஏற்படுத்துகிறது என்பதை ஆக்கபூர்வமாக இந்த வீடியோ விளக்குகிறது.

# மக்கள் வங்கி முதலாவது காலாண்டில் ரூபா 92.7 பில்லியன் திரட்டல்



இலங்கையின் முன்னணி நிதியியல் சேவைகள் வழங்குனரான மக்கள் வங்கி, 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த முதலாவது காலாண்டுக்கான நிதியியல் பெறுபேறுகளை இன்று அறிவித்துள்ளது.

மொத்த திரட்டிய தொழிற்பாட்டு வருமானமாக ரூபா 20.4 பில்லியனையும் மற்றும் வரிக்குப் பின்னரான இலாபமாக ரூபா 2.5 பில்லியனையும் வங்கி பதிவாக்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, கூடுதல் விவேகத்துடன் மேற்கொள்ளப்பட்ட விதிவிலக்கான செம்மையாக்கல்களின் தாக்கம் நீங்கலாக, இந்த தொகைகளை சாதாரண நிலைமை அடிப்படையில் கருத்தில் கொள்ளும் போது அவை முறையே 18.2% மற்றும் 35.8வீத வளர்ச்சியுடன், ரூபா 28.4 பில்லியன் மற்றும் ரூபா 6.6 பில்லியன் ஆக அமைந்துள்ளன.

திரட்டிய தேறிய வட்டி வருமானம், 2023 இன் இதே காலப்பகுதியில் பதிவாக்கப்பட்ட ரூபா 15.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில், இக்காலாண்டில் ரூபா 16.1 பில்லியனாக அதிகரித்துள்ளது. எந்தவொரு விதிவிலக்கானவற்றினதும் தாக்கம் நீங்கலாக, சாதாரண நிலைமை அடிப்படையில் திரட்டிய தேறிய வட்டி இலாப மட்டங்கள் 2023 இன் போது காணப்பட்ட 2.0வீதத்தில் இருந்து 3.0வீதமாக மேம்பட்டுள்ளதுடன், கடனுக்கான தவணை வைப்புச் செலவின் குறைவை பிரதிபலிக்கின்றது.

திரட்டிய தேறிய கட்டணங்கள் மற்றும் தரகுப்பணங்கள் கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 14.7% அதிகரிப்புடன் ரூபா 3.8 பில்லியனாக பதிவாக்கப்பட்டுள்ளது.

மொத்த திரட்டிய தொழிற்பாட்டுச் செலவுகள் ரூபா 17.6 பில்லியனாக காணப்பட்டது (2023: ரூபா 14.4 பில்லியன்).

# புதிய தலைமைச் செயற்பாட்டு அதிகாரியாக சஞ்சய் விஜேமான்னவை நியமித்தது HNB



இலங்கையின் மிகப்பெரிய தனியார் துறை வாடிக்கையாளர் வங்கியான HNB PLC, சஞ்சய் விஜேமான்னவை வங்கியின் புதிய தலைமைச் செயற்பாட்டு அதிகாரியாக (COO) 26 ஏப்ரல் 2024 முதல் அமுலுக்கு வரும் வகையில், உரிய ஒழுங்குமுறை அனுமதிகளுக்கு உட்பட்டு நியமித்தது.

14 வருடங்களுக்கும் மேலான பெருநிறுவன முகாமைத்துவ வெளிப்பாடு உட்பட 29 வருடங்களுக்கும் மேலான அனுபவமுள்ள வங்கித் துறையில் அனுபவம் வாய்ந்த விஜேமன்ன இதற்கு முன்னர் HNB இன் பிரதிப் பொது முகாமையாளர் – வாடிக்கையாளர் வங்கிக் குழுமமாக பணியாற்றினார்.

"COOஆக சஞ்ஜெய் நியமிக்கப்பட்டது, வணிகச் சிறப்பிற்கான எங்கள் அர்ப்பணிப்பையும், எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகள் மற்றும் பரந்த பொருளாதார நிலப்பரப்பிற்கு ஏற்றவாறு செயல்படுவதற்கான எங்கள் அர்ப்பணிப்பையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

அவரது நிரூபிக்கப்பட்ட நிபுணத்துவம் மற்றும் முன்னோக்கு சிந்தனை அணுகுமுறை ஆகியவை எங்கள் மூலோபாய முன்முயற்சிகளை இயக்குவதற்கும், பெருகிய முறையில் போட்டி மற்றும் ஆற்றல்மிக்க சூழலில் விதிவிலக்கான மதிப்பு மற்றும் சேவையை வழங்குவதற்கும் முக்கியமானதாகும்." என HNBஇன் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரி தமித் பல்லேவத்த தெரிவித்தார்.

# ஸ்ரீ லங்கா இன்ஸூரன்ஸின் விழிப்புணர்வு அமர்வு



ஸ்ரீ லங்கா இன்ஸூரன்ஸ் கோர்பரேஷன் ஜெனரல் லிமிடெட் (SLICGL) நிறுவனத்தினால் பூரண CAR (ஒப்பந்தக்காரர்களது அனைத்து அபாயவாய்ப்பு) காப்புறுதி விழிப்புணர்வு அமர்வு அண்மையில் கொழும்பு Courtyard by Marriott இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில், நிர்மாணத்துறையைச் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரி சபையைச் சேர்ந்தவர்களுக்கு நிர்மாண செயற்திட்டங்களுடன் தொடர்புடைய அபாயங்களைக் குறைத்துக் கொள்வதற்கு ஊயுசு காப்புறுதியினால் வழங்கப்படும் முக்கிய பங்களிப்பு தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

CAR காப்புறுதியின் பல்வேறு உள்ளம்சங்களான காப்புறுதியின் தன்மை, அனுகூலங்கள், இடர் மதிப்பாய்வுகள், காப்புறுதி உள்ளம்சங்கள், உரிமைகோரல் நிர்வகிப்பு மற்றும் எதிர்பாராத இடர்கள் மற்றும் கடப்பாடுகளிலிருந்து செயற்திட்டங்களை பாதுகாப்பதற்கான சிறந்த செயன்முறைகள் போன்றன தொடர்பில் விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன.

நிர்மாணத்துறையின் வளர்ச்சி மற்றும் மீட்சி தொடர்பில் SLICGL கொண்டுள்ள அர்ப்பணிப்பு குறித்தும் இந்த அமர்வின் போது வலியுறுத்தப்பட்டிருந்ததுடன், பங்காளர்களின் ஈடுபாடு மற்றும் முதலீடுகளை பாதுகாப்பதை உறுதி செய்வது பற்றியும் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

நிர்மாணத்துறை எதிர்கொண்டுள்ள இடர் முகாமைத்துவ சவால்கள் தொடர்பில் அனைவரும் ஒன்றிணைந்து அர்த்தமுள்ள வகையில் உரையாடல்களில் ஈடுபடுவது, அறிவுப் பகிர்வு மற்றும் தொடர்பாடல் வாய்ப்புகள் ஆகியவற்றை முன்னெடுப்பதில் SLICGL கவனம் செலுத்தியிருந்தது.

## VIMAN தொடர்மாடிக் குடியிருப்புத் திட்டத்தில் அனுபவத்தைப் பெற்ற DFCC யின் வாடிக்கையாளர்கள்










ஜா-எல Viman மாதிரி தொடர்மாடிக் குடியிருப்புத் திட்டத்தைப் பார்வையிடுவதற்கு மதிப்பு மிக்க DFCC வங்கியின் வாடிக்கையாளர்களை அழைத்ததன் ஊடாக John Keells Properties நிறுவனம் DFCC வங்கியுடனான தனது கூட்டாண்மையை மேலும் பலப்படுத்தியுள்ளது.

இந்த மூலோபாயக் கூட்டாண்மையின் ஊடாக ஏஅயெ திட்டத்தில் தங்களுடைய கனவு இல்லத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்த்திருக்கும் எதிர்கால வீட்டு உரிமையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு கட்டாயமான வாய்ப்பை உருவாக்குவதற்கு DFCC வங்கி கவர்ச்சிகரமான வீட்டு அடமானத் தீர்வுகளை விரிவுபடுத்துகின்றது.

வொக்ஸ்ஹால் வீதி, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ள John Keells Properties நிறுவனத்தின் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜா-எல Viman குடியிருப்புத் திட்டத்தின் மாதிரி தொடர்மாடியில் தனித்துவமான நிகழ்வொன்று முன்னெடுக்கப்பட்டது.

வீட்டின் உரிமையை சுமூகமான முறையில் பெற்றுக் கொள்ளக் கூடிய தனிப்பயனாக்கப்பட்ட அடகுத் தீர்வுகள் உள்ளிட்ட இத்திட்டத்தில் காணப்படும் நன்மைகளைப் புரிந்துகொள்ளும் நோக்கில் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அனுபவம் மிக்க விற்பனைக் குழுவினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

பெறுமதிமிக்க இந்தக் கலந்துரையாடல் மூலம் வாடிக்கையாளர்கள் இத்திட்டம் குறித்து சரியான புரிதலையும், இதனால் வழங்கப்படும் தனித்துவமான வசதிகள் பற்றியும் அறிந்துகொண்டனர்.

## புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் தேசிய சுற்றாடல் ஒன்றியம்



பாஹியங்கல ஆனந்த சாகர தேரர் தலைமையிலான தேசிய சுற்றாடல் ஒன்றியம், இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகார சபையின் (SLSEA) தலைவரிடம் அண்மையில் அறிக்கை ஒன்றை கையளித்துள்ளது.

போதிய சூரிய ஒளி, உயிரியல் கழிவுகள், காற்றாலை, நீர் மூலங்களைக் கொண்ட இலங்கையானது, புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை உற்பத்தி செய்வதற்கான முக்கிய ஆற்றல்களைக் கொண்டுள்ளது என்பதை, அவர்கள் இந்த அறிக்கையில் வலியுறுத்துகின்றனர்.

இந்த இயற்கை வளங்களை வலுசக்திக்காக பயன்படுத்த நாட்டின் புவியியல் அமைவிடம் ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. ஆயினும், புதுப்பிக்கத்தக்க வலுசக்தித் துறையானது, புதிய தொழில்நுட்பங்களின் பற்றாக்குறை, போதிய அளவில் புதிய திட்டங்களின் ஸ்தாபிக்கப்படாமை மற்றும் நிலையற்ற நிதி உள்ளிட்ட முக்கிய சவால்களை எதிர்கொள்கிறது.

நாட்டின் சமீபத்திய மின்சாரத் தடை மற்றும் தற்போதைய மின்சார பிரச்சினைகளால் இந்த சிக்கல்கள் மேலும் அதிகரித்துள்ளதோடு, இது பொருளாதாரத்திற்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சவால்களை எதிர்கொள்ளவும், புதிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டங்களில் முதலீட்டை ஊக்குவிக்கவும், ஆக்கபூர்வமான உத்திகள், சிறந்த திட்டங்கள், புதிய சட்டங்கள் மற்றும் விதிமுறைகள், தனித்துவமான ஊக்குவிப்புத் தொகைகள் உள்ளிட்ட விடயங்களை உருவாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வரவேண்டும். இந்த நடவடிக்கைகளானவை நுகர்வோர் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதை ஊக்குவிக்கும் என்பதுடன் இத்துறையின் வளர்ச்சியை துரிதப்படுத்தும்.

தெளிவான பலன்கள் இருந்தபோதிலும், பல்வேறு குறுகிய நோக்கங்களை நியாயப்படுத்தி, புதுப்பிக்கத்தக்க மின்சக்தித் திட்டங்களைத் தடுக்கவும், தாமதப்படுத்தவும், சுயநலம் கொண்ட சில குழுக்கள் முயன்று வருவதாகவும் இந்த அறிக்கையில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மீள் புதுப்பிக்கத்தக்க மின்சக்தி திட்டங்களை ஊக்குவிப்பதற்கும் அவற்றை முன்னே கொண்டு செல்வதற்கும் தேசிய சுற்றாடல் ஒன்றியம் உறுதியாக இருந்து வருகிறது. குறிப்பாக இலங்கையின் தற்போதைய நிதி நெருக்கடிக்கு மத்தியில், அவர்கள், உள்ளூர் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கும் ஆதரிப்பதற்கும் உறுதி பூண்டுள்ளதோடு, வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளனர்.

மன்னார் மற்றும் பூநகரிக்கு இடையில் 500 ஆறு காற்றாலை மின்சக்தித் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளமை இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இந்த திட்டத்திற்கு பல்வேறு காரணங்களால் பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். சுற்றுச்சூழல் பாதிப்பைத் குறைக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டால், இந்தத் திட்டம் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டுமென, தேசிய சுற்றாடல் ஒன்றியம் எதிர்பார்க்கிறது.